# விசுவாசத்தோடு எதிர்பார்ப்பதா? அல்லது விட்டுவிடுவதா?

Sermon Transcription June 2019

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

ETERNAL LIGHT AG
let your light shine

# விசுவாசத்தோடு எதிர்பார்ப்பதா?

# அல்லது

# விட்டுவிடுவதா?

போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

# முகவுரை

**“பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்” ஏசாயா 6:8.**

என்னுடைய தேவனுக்காக உலர்ந்த எலும்புகளையெல்லாம் உயிருள்ள தேவசேனையாக மாற்றுவதே என்னுடைய ஊழியத்தின் குறிக்கோளாயிருக்கிறது. என்னுடைய ஜெபத்திலே ஆண்டவர் வெளிப்படுத்தின ஆவிக்குரிய இரகசியங்களை என் சபை மக்கள் கற்றுக்கொண்டு ஆச்சரியப்படும் விதத்தில் வளர்ந்திருக்கிறார்கள். அபிஷேகம் பெற்ற தேவசேனை உருவாகிக்கொண்டு வருகிறதை என்னால் காணமுடிகிறது. உலகத்தின் பின்னே ஓடிக்கொண்டு இருந்தவர்கள், இப்போது ஆவியிலே நிறைந்து தேவனைத் தேடி ஓடி வருகிறார்கள்.

**“எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்” எசேக்கியேல் 37:10.**

இந்த ஆவிக்குரிய தேவ இரகசியங்களை நீங்களும் கற்றுக்கொண்டு, ஆவியின் அதிகாரங்களையும், வல்லமையையும் பெற்றுக்கொண்டு தேவசித்தத்தை நிறைவேற்றப் பாடுபட வேண்டும் என்ற வாஞ்சையுடனே இந்தப் புத்தகம் மிகுந்த பிரயாசத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய பிரசன்னத்தில் பல மணிநேரம் காத்திருந்து பெற்றுக்கொண்ட மேன்மையான காரியங்களை நீங்களும் கற்றுக்கொண்டு, பிசாசை காலின் கீழாக மிதிக்கவும், தேவ இராஜ்ஜியத்தைக் கட்டவும் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

நீங்கள் இந்தப் புத்தகத்தை ஜெபத்தோடு வாசித்துப் பயனடைய எல்லா ஆவிகளின் பிதாவும், பாதாளத்தின் வாசல்களை மேற்கொண்டவரும், வெற்றி சிறந்தவருமான எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கிறேன்.

இந்தப் புத்தக உருவாக்கத்திற்காகப் பிரயாசப்பட்ட என்னுடைய மக்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. விசுவாசமும் பயமும் | 2 |
| 2. விசுவாசத்தில் நடந்து கொண்டே இருங்கள் | 45 |
| 3. உயிர்ப்பிக்கும் சாட்சி | 78 |

# விசுவாசமும் பயமும்

கர்த்தருடைய சமூகத்தில் வளரவும், பெறவும், திருத்தப்படவும், மாறவும் வந்து அமர்ந்து காத்திருக்கிற உங்கள் யாவருக்காகவும் நான் ஆண்டவருக்கு நன்றிகளை செலுத்துகிறேன்.

கர்த்தர் உங்களுக்குள் விதைத்த வாஞ்சை நிச்சயம் வளரும். நாம் கற்றுக் கொண்டு கட்டப் படுவோம். கர்த்தர் நம் ஒவ்வொருவரின் மீதும் வைத்து துவங்கியிருக்கிற அவரின் திருவுளச் சித்தம், நம்மில் பூரணமாய் வெளிப்பட செயல்படுவோமாக. இந்த திருச்சபைக்கு என்று கர்த்தர் துவங்கிய காரியங்கள், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளிலும் நிறைவேற எழும்புவோமாக.

பலிபீடம், பலிபீடத்தை ஸ்திரப்படுத்துதல், பலிபீடத்திற்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக வல்லமைக்கும் உரிய தொடர்புகள் குறித்தெல்லாம் நாம் ஏற்கனவே தியானித்தோம். நமது சரீரமே பலிபீடம்! இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தை இணைக்கக் கூடிய ஒரே உறுப்பு நமது நாவே. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை குறித்தும், வாயினால் கர்த்தரைத் துதிக்கும் துதி பலியைக் குறித்தும் வேதத்தில்அநேக வசனங்கள் உண்டு.

இப்பொழுதும் காணக்கூடாத ஒளியில் வாசம் செய்யும் தேவனை எப்படி நம் ஆள்தத்துவத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்று தியானிப்போம். தேவன் ஆவியாய் இருக்கிறார் எனவே நாம் சரீரப்பிரகாரமாய் தொடர்புகொள்ள முடியாது. மனிதன் தனக்கென்று ஒரு ஆவியை உடையவன் என்ற சுய அறிவும், அந்த ஆவி மறுபடியும் பிறந்த அனுபவத்தை (யோவான் 3:3-8, யோவான் 1:13, தீத்து 3:5) பெற்றிருந்தால் மட்டுமே ஆவியாகிய தேவனை கண்டுகொள்ள முடியும். அவரோடு உறவாட முடியும்.

மறுபடியும் பிறக்கும் அனுபவம் என்பது உடல் ரீதியான மறுபிறப்பைக் குறிக்காது; மாறாக இது ஒரு ஆன்மீக மாற்றம் ஆகும் (ஆவிக்குரிய புரிதல்). மறுபடியும் பிறப்பது கடவுளின் செயலாகும், இந்நம்பிக்கையின் மூலம் நித்திய ஜீவன் அருளப்படுகிறது. **மறுபடியும் பிறக்கும்** அனுபவத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் **தேவனுடைய புத்திரர்கள்** ஆகும் சத்தியத்தை நிச்சயித்துக் கொள்கிறோம் (ரோமர் 8:16).

## நாம் ஒரு ஆவியாய் ஆன்மாவைக் கொண்டு சரீரத்தில் வாழ்கிறோம்

தேவனால் அருளப்பட்ட மனுஷனுடைய ஆவியானது முன்குறிக்கப்பட்டது, முழுமையானது. எந்த சக்தியாலும் அதை தொட முடியாது, தீங்கிழைக்க முடியாது. ஆவிக்குரிய வாழ்வில் நாம் உயிர்ப்போடும் துடிப்போடும் இருந்தால், தேவ ஆவியோடு எளிதில் தொடர்பு கொண்டு நன்மைகளைப் பெற்று ஆவியின் நிறைவில் வாழ்ந்திடுவோம். ஆவியைக் குறித்த அறிவு நமக்கு இல்லாமல் போனால், தேவ ஆவியானவரோடு தொடர்பு

இல்லாதவர்களாய் வாழ்நாள் முழுதும் அந்த ஆவியோடு ஜீவித்து, தேவன் நமது ஆவிக்கென்று முன்குறித்து வைத்த அவரின் மகத்தான திட்டங்களை நிறைவேற்ற இயலாமல் மரித்து விடுவோம்.

**நமது ஆவி மிகுதியான ஆற்றலும், செழிப்பும், வெற்றியும், அதிகாரமும், வல்லமையும் கொண்டது!**

நாமாகவே நினைத்த மாத்திரத்தில் தேவ ஆவியானவரோடு தொடர்பு கொள்ளவும், பெறவும் முடியாது. நம்முடைய ஆவி தேவனுடைய ஆவியோடு உறவற்று இருப்பது என்பது மின்விசை (charge) இல்லாத பயனற்ற மின்கலத்திற்கு (battery) ஒப்பாகும். தோற்றுப்போன ஜீவியமாய் மரித்து விடுவோம்.

பல கிறிஸ்தவர்கள் மேலான அழைப்பைப் பெற்றிருந்தும், அதனைக் குறித்து பல தீர்க்கதரிசனகள் முன்னறிவிக்கப் பட்டிருந்தும் ஆவியானவரோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டிய அறிவு இல்லாததால் ஆவிக்குரிய ஜீவியத்தில் செயல்பட முடிவதில்லை. கர்த்தர் அவர்கள் மீது வைத்துள்ள மேன்மையான ஆவிக்குரிய ஜீவிய திட்டத்தை விட்டுவிட்டு மாம்ச ரீதியாகவோ அல்லது ஆத்மார்த்தமான சுயநீதி மனப்பான்மையிலோ சாதாரண வாழ்க்கை வாழ முயல்கிறார்கள். அவர்கள் எதை தவற விட்டோம் என்பதை மரித்த பின்பே புரிந்து கொள்கிறார்கள் ஏனென்றால் அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை பொருட்படுத்தவில்லை.

நம் இருதயமாகிய மனக்கண்களை திறந்ததற்காக கர்த்தருக்கு நன்றியை செலுத்துகிறேன். கர்த்தர் நமக்கென்று குறித்த இலக்கை அடையாவிட்டாலும் சரியான பாதையிலே பயணிக்கிறோம். நாம் மிகச்சரியான பாதையில் பயணிக்கிற காரணத்தினாலேயே **நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.** ஒரு சபை மக்களாக இலக்கை நோக்கி வாஞ்சையாய் தொடர்கிறோம். நிச்சயமாகவே தேவன் நமக்கு நியமித்திருக்கிற அழைப்பில் நாம் முழுமையாய் செயல்பட்டு கர்த்தருக்கு சாட்சியாய் வாழ்வோம்! ஆமென்!!


சற்று ஆத்துமாவைக் குறித்து சிந்திப்போம். ஆத்துமா என்பது நாம் தான். நமது ஆளுமை தான் ஆத்துமா. நம் உணர்ச்சிகளின் இருக்கையும், போர்க்களமும் நமது ஆத்துமாவே. அசுத்த ஆவிகள் நமது ஆத்மாவில் தேவையற்ற விஷயங்களைக் காட்ட முயற்சிக்கின்றன. அசுத்த ஆவிகளால் எளிதில் நம் ஆத்துமாவையும் (மனது), சரீரத்தையும் அணுக முடியும், ஆனால் நமது ஆவியைத் தொட முடியாது. ஆகவே தான் அவைகள் தீமையின் உமிழும் ஈட்டிகளைக் காட்டி நம்மைத் தாக்க முயற்சிக்கிறது.

அசுத்த ஆவிகள் நம் ஆத்துமாவைத் தாக்குகின்றன. பலவீனப்படுத்துகிற சில சூழ்நிலைகளை உருவாக்கி நமது ஆத்துமாவை வலிமை இழக்கச் செய்து தாக்குதல்களில் பாதிப்பு அடையக்கூடியதாக்குகின்றது. எவ்வளவு அதிகமாக ஆத்துமா வலுவாய் உள்ளதோ, அவ்வளவாய் பிசாசின் தாக்குதல்களில் இருந்து விடுபட முடியும். அதனால்தான் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் தொடர்ந்து நம் ஆ த்துமாவைப் பாதுகாக்க வேண்டும். விடா முயற்சியுடன் நம் ஆத்துமாவைப் பாதுகாக்க வேண்டும், இவ்வாறு

இல்லையேல் பெலனற்று விழுந்துவிடுவோம். ஆத்துமா பாதுகாப்பாக இருக்கும் வரை, பிசாசு நம்மைத் தொடமுடியாது!

**I கொரிந்தியர் 2**

9. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் (**சரீரம்**) காணவுமில்லை, காது (**சரீரம்**) கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் (**ஆத்துமா**) தோன்றவுமில்லை;
11. மனுஷனிலுள்ள **ஆவி**யேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்?



ஆத்துமாவைக் குறித்து சொல்வதென்றால் அது நம்முடைய உறைவிடம் எனலாம். நாம் ஒரு மாம்ச சரீரம். நம்மில் உள்ள சதைப் பகுதியை பிரித்தெடுத்தால் நாம் யார்? நாம் உணர்ச்சிகளின் தொகுப்பு. நமக்குள் உடல் வலியும் உண்டு, உணர்ச்சிகளைச் சார்ந்த மன வலியும் உண்டு. உடல் வலி சீக்கிரத்தில் குணமாகும் ஆனால் மன வலியோ நெடுநாள் ஆராதது. நமக்கு உடல் சார்ந்த விருப்பங்களும் உண்டு உணர்ச்சிகள் சார்ந்த விருப்பங்களும் உண்டு. எனவே நாம் உணர்ச்சிகளைக் கொண்ட மாம்ச தேகம் எனலாம்.. மாம்சத்தையும், உணர்ச்சிகளையும் ஒருங்கே பெற்ற ஒரு நபர் நாம். நமது மனம் எதிலும் பிடிப்பில்லாதிருந்தால் மனநல மருத்துவரையும், உபாதை உற்றால் பொது மருத்துவரையும் பார்க்க வேண்டும்.

நமது ஆத்துமா வெறும் உணர்ச்சிகளை மட்டுமே சார்ந்தது என்று சொல்லி விட முடியாது. ஆத்துமா உணர்ச்சிகளையெல்லாம் விட ஆழமானது. மனதிற்கு மட்டுமல்ல நம் ஆத்துமாவுக்கும் உணர்ச்சிகள் உண்டு. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, நம்பிக்கை, பயம், பதட்டம், மனச்சோர்வு மற்றும் எரிச்சல் என்ற உணர்ச்சிகள் உள்ளது. இந்த உணர்ச்சிகளை இருவகைப் படுத்தலாம். ஒன்று தேவனிடம் இருந்து வருபவை மற்றொன்று அசுத்த ஆவிகளிடம் இருந்து வரும் உணர்வுகள். அன்பு, சந்தோஷம், சமாதானம், விசுவாசம் ஆகிய இவைகள் தேவனிடம் இருந்து வருபவை.

இயேசுவின் ஆவிக்கு விசேஷித்த நற்பண்புகள் உண்டு. அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அசுத்த ஆவிகளிடம் இருந்து கோபம், எரிச்சல், மனச்சோர்வு என பல எதிர்மறை உணர்ச்சிகள் வருகின்றது. இப்படிப்பட்ட எல்லா உணிர்ச்சிகளுமே ஆவிக்குரியதாகும். இவைகளில் எந்த உணர்ச்சிகளைக்கொண்டு இயங்க விரும்புகிறோமோ அவற்றையே நாம் வெளிப்படுத்துவோம். தேவ ஆவியோடு இணைக்கப்பட்டிருப்போமானால் இரக்கம், அன்பு, சந்தோஷம், சமாதானம், விசுவாசம் ஆகிய நற்பண்புகளை கொண்டிருப்போம். அதுபோலவே அசுத்த ஆவிகள் நம்மை ஆதிக்கம் செலுத்த விட்டுவிட்டால் பயம், கோபம், சுயபரிதாபம், மனச்சோர்வு போன்ற உணர்வுகளால் ஒடுக்கப்படுவோம்.

விசுவாசம், பயம் என்ற இந்த இரு உணர்ச்சிகளைப்பற்றித் தான் நாம் தியானிக்கப்போகிறோம். பல்வேறு உணர்ச்சிகள் இருந்தாலும் அனைத்து நேர்மறை உணர்ச்சிகளையும் விசுவாசத்தின் கீழ் கொண்டு வர முடியும். அசுத்த ஆவிகளிடம் இருந்து வரும் அனைத்து எதிர்மறை உணர்ச்சிகளையும் கோபம் என்ற உணர்வுக்குள் வரையறுக்க முடியும். கோபம், சுயபரிதாபம், மனச்சோர்வு ஆகியவை பயத்தின் பின்விளைவுகள் ஆகும். அடிப்படையில் விசுவாசம், பயம் ஆகிய இவ்விரு உணர்ச்சிகளே மற்ற அனைத்தையும் கட்டுப்படுத்துவது ஆகும்.

வேதாகமத்தில் கிட்டத்தட்ட 365 முறை பயப்படாதே, பயப்படவேண்டாம், பயப்படாதிருங்கள் போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து எப்பொழுதெல்லாம் மக்களிடம் சொற்பொழிவாற்றினாரோ அப்பொழுது அவர்களின் பயத்தைக் குறித்தும் விசுவாசத்தைக் குறித்தும் உரையாற்றினார். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம்

உற்று நோக்கினால் வியாதி, மரணம், வலி, காற்று முதலியனவற்றை கையாள்கையில், பயம் மற்றும் விசுவாசத்தின் அடிப்படையிலேயே மனிதனிடம் பேசினார்.

பேதுரு தண்ணீரில் நடந்து மூழ்கத் தொடங்கியபோது, இயேசு அவனது கையைப் பிடித்து, “பயப்படாதே” என்றார். படகில் இருந்த சீஷர்களும் பயந்து போன போது, நீங்கள் ஏன் பயந்தீர்கள்? உங்கள் விசுவாசம் எங்கே போனது? என்று இயேசு கேட்டார். பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தை தொட்டபோது அவளைப் பார்த்து "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு" என்றார்.

ஜெபஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு தன் மகளை குணமாக்கும்படி இயேசுவிடம் மிகவும் வேண்டிக்கொண்டான். ஜெபஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே, ஜெபஆலயத்தலைவனை நோக்கி: "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு" என்றார். பர்திமேயு என்கிற ஒரு குருடன் இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத்தொடங்கினான். இயேசு அவனது விசுவாசத்தைக் குறித்து பேசினார். கானானிய ஸ்திரீக்கும் அதுபோலவே சம்பவித்தது. இயேசு அவளின் விசுவாசத்தை மெச்சினார்.

இப்படியாக இயேசு மக்களின் பயத்தை கையாண்ட விதத்தை பல காரியங்களில் நாம் பார்த்துக்கொண்டே இருக்க முடியும். அவர் பயத்தை கடிந்து கொண்டு விசுவாசத்தை போதித்தார். இந்த ஆத்துமாவையே நாம் இப்பொழுது கையாள்கிறோம்.

ஒவ்வொரு அற்புதங்களை நிகழ்த்தும் போதும் இயேசு விசுவாசத்தைக் குறித்து மக்களிடம் எடுத்துரைத்தார். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய உலகில் இணைவதற்கு ஆத்துமப் பூர்வமான உணர்வுகள் அவசியம். ஆகவே தான் வேதாகமத்தில் அனைத்து இடங்களிலும் **பயப்படாதே** என்ற வாக்கு நெடுகவே கூறப்படுகிறது. பயம் தேவனிடம் இருந்து வருவபை அல்ல (2 தீமோத்தேயு 1: 7). பயத்தை நீங்கள் அனுமதிக்கும் மாத்திரத்தில் ஒரு புகை உங்களின் உள்ளிருந்து எழும்புவது போல பிசாசினுடைய உணர்ச்சிகள் உங்களை மூடி விடும்.

இங்கே கேள்வி என்னவென்றால், நீங்கள் எப்படி இப்பொழுது பயத்தை எடுத்துப்போடுவீர்கள்? பயமும் விசுவாசமும் இருளும் ஒளியும் அல்லது குளிரும் அனலும் போன்றவை. இரண்டு உணர்ச்சிகளும் இரு வேறு உச்சங்கள். இதோ உலகத்தின் அதிபதி வருகிறான் என்று இயேசு தெளிவாகக் கூறினார். பிசாசின் ஆதிக்கம் உலகை ஆளுகிறது என்ற நிச்சயமான உண்மையை இயேசு மறைக்கவில்லை. பிசாசு உலகை ஆளுகை செய்கிற காரணத்தால் தான் அது இருளாகவும் பயமுள்ளதாகவும் இருக்கிறது.

இருளை எவ்வாறு விவரிக்க முடியும்? வெளிச்சம் இல்லாது இருப்பதே இருளாகும். வெளிச்சம் இல்லாது இருந்தால் இருள் நிறைந்திருக்கும். நீங்கள் ஒளியை உங்களுக்குள் உருவாக்கும் போது இருள் தானாகவே விலகிவிடும். இருளோடு நீங்கள் போராட வேண்டிய அவசியம் இல்லை. ஒளியின் வீரியம் குறையும் போது, இருளின் தீவிரம் அதிகரிக்கும். உங்களால் ஒளியை உருவாக்க முடியும், ஆனால் இருளை உருவாக்க முடியாது. குளிர் என்றால் என்ன? அனல் இல்லாது இருப்பதே குளிர் ஆகும். அதுபோல வெளிச்சம் இல்லாது இருப்பதே இருளாகும்.

**பயம் என்பது விசுவாசம் இல்லாமல் இருப்பது.**

பயத்தை எப்படித் தவிர்ப்பது? பயத்துடன் போராட வேண்டாம். சில உளவியலாளர்கள் (psychologists) நீங்கள் பயத்தை எதிர்த்துப் போராட வேண்டும், அதனை மேற்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஆனால் உண்மையில், நீங்கள் பயத்தை எதிர்த்துப் போராடக்கூடாது. பயம் ஆவிக்குரியது. இது எந்த உளவியல் சிகிச்சைக்கும் அப்பாற்பட்டது. இரு சக்கர வண்டியில் சவாரி செய்வது, பாம்பைப் பற்றி பேசுவது, ஒரு பாலத்தின் மீது நடப்பதெல்லாம் பயமாகாது. தங்கள் வாழ்நாள் முழுவதும் இருளின் பயத்தில் வாழும் மக்களைப் பற்றி நான் பேசுகிறேன். வாழ்வதற்கு ஒருவித பயம் தேவை. இரு சக்கர வண்டியில் சவாரி செய்ய வேண்டும் என்றால் பயம் அவசியம், இல்லையென்றால் நீங்கள் விழுந்து விடுவீர்கள். பாம்புகளைக் குறித்து எச்சரிக்கையோடு கூடிய பயம் அவசியம், இல்லை என்றால் நீங்கள் தீண்டப்படுவீர்கள். ஆனால் இப்போது நாம் கையாள நினைப்பதோ உங்களுக்குள் ஆழ் மனதில் நிலவும் பயமாகும்.

எல்லா நேரங்களிலும் நாம் பயம் மற்றும் தோல்வியின் அடிப்படையிலேயே காரியங்களை அணுகுகிறோம். இயல்பாகவே நாம் பயம், இழப்பு மற்றும் தோல்வி மனப்பான்மையிலேயே செயல்படுகிறோம். இதைக் குறித்ததுதான் நான் பேசுகிறேன்; இது எந்த உளவியல் சிகிச்சைக்கும் அப்பாற்பட்டது. இப்படிப்பட்டதான பயம் ஆவிக்குரியது. இயல்பாகவே, நீங்கள் எல்லா நேரத்திலும் பயம், மரணம் மற்றும் தோல்வியின் மன நிலையிலேயே செயல்படுகிறீர்கள்.

தொடர்ந்து உணர்வுப் பூர்வமாய் நாம் நம் மனதைப் புதிப்பிக்காமல் போனால் பயத்தில் வாழ்வோம். மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் கூட தங்கள் மனதைப் புதுப்பிக்கும் காரியத்தை அறிந்து செயல்படாமல் பயத்தில் வாழ்கிறார்கள். நான் எதிர்காலத்துக்காக சேமிக்கிறேன் என்று. நீங்கள் சொல்லலாம். சாலையில் ஏற்படும் விபத்துக்களைக் குறித்த அச்சத்தினால் காற்றுப்பைகளை (airbag) உடைய மகிழுந்தை (car) வாங்கி இருக்கலாம். நம்மில் பலர் எல்லா நேரத்திலும் பயத்தால் உந்தப்படுகிறோம்.

பயம் நமக்குள் தோல்வி, எதிர்மறை எண்ணங்கள் மற்றும் மரணத்தை தோற்றுவிக்கும். இந்த பய உணர்வினால் இயல்பாகவே நீங்கள் உச்சகட்ட எரிச்சலினால் செயல்படுவீர்கள். பயமற்றிருந்தால் நீங்கள் எதற்கும் அலட்டாமல் இருப்பீர்கள். சிலர் எல்லா நேரங்களிலும் பயத்தினால் செயல்படுகிறார்கள். கீழே விழுந்து மரித்து விடுவேனோ, விபத்தில் சிக்கி

விடுவேனோ அல்லது என் குழந்தை நீச்சல் குளத்தில் மூழ்கி இறந்து விடுமோ என்று அவர்கள் மனம் என்றுமே பயத்தால் நிறைந்திருக்கும். எப்பொழுதும் பயத்தோடே கூட செயல்படுவார்கள். இது ஆவிக்குரிய தாக்குதல் ஆகும்!

பூமியை எப்பொழுதும் இருள் சூழத் தயாராக இருப்பதைப் போல, பயமும் மக்களை சூழத் தயாராக உள்ளது. ஏனென்றால் அசுத்த ஆவிகள் இப்பூமியை சூழ்ந்துள்ளது. தேவனுடைய பிள்ளைகளான நாம் இயேசுவின் ஆவியுடன் இணைந்திருக்கிறோம். ஆவி, உடல் மற்றும் ஆத்துமா இவைகளில் ஆவி இயேசுவை நம்புவதால் அது மீண்டும் புதுப்பிக்கப் படுகிறது. மனதும், ஆத்துமாவும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று திருமறை கூறுகிறது (சங்கீதம் 23: 3, எபேசியர் 4:23, ரோமர் 12: 2, 2 கொரிந்தியர் 4:16). உங்கள் உடல் இறக்க நேரிடும்! அது நரகத்திற்குச் செல்வதில்லை மாறாக மண்ணுக்குத் செல்கிறது. அது மண்ணிலிருந்து வந்ததால் மண்ணுக்குத் திரும்புகிறது. ஆத்மா ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட வேண்டும்.
நீங்கள் மிகப் பெரிய ஒளிஊற்றைக் கொண்டுவந்தாலும், அதனை அகற்றும் மாத்திரத்தில், இருள் சூழ்கிறது. நீங்கள் மிகப்பெரிய வெளிப்பாட்டைப் பெற்றிருக்கலாம். சூழ்நிலைகளால் உங்கள் ஆன்மா தாக்கப்பட்ட தருணம் உடனடியாக பயம் வருகிறது. உங்களை நெருக்கி நிற்கிற சூழ்நிலைகளால் நீங்கள் தாக்கப்படும்போது பயம் உங்களுக்குள் உட்பிரவேசிக்கிறது.

இயேசு தண்ணீரில் நடப்பதைக் கண்ட பேதுரு, “நானும் ஜலத்தில் நடந்து வரட்டும்” என்றான். அதற்கு இயேசுவிடமிருந்து வந்த வார்த்தையோ மிகுந்த வல்லமை நிறைந்த "ரேமா" (Rhema) வார்த்தையாகும். இந்த வார்த்தை பேதுருவின் ஆத்துமாவுக்குள் ஊடுருவி உட்பிரவேசித்ததால் தண்ணீரில் நடக்க முடிந்தது. அவர் அதிசயத்தில் நடக்க முடிந்தது. அவரது ஆத்மாவுக்குள் “வா” என்ற வார்த்தை இருந்த வரை, அவர் ஒவ்வொரு அடியிலும் ஒரு அதிசயத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அந்த வார்த்தை அவரை தண்ணீரில் நடக்க வைத்தது.

ஆனாலும் பிசாசுக்கு நம்மை எப்படி சமாளிப்பது என்று தெரியும். அசுத்த ஆவியால் நம்மைத் தொட முடியாவிடினும் நமக்குள் உள்ள வார்த்தையை வெளியே எடுக்க முடியா விடினும், அதனால் நிச்சயமாக ஏதாவது செய்ய முடியும். பெருங்காற்றையும் அலைகளையும் வீசச் செய்யக் கூடும். நீங்கள் இப்படிப்பட்ட பெருங்காற்றையும் அலைகளையும் பார்த்து, உங்கள் ஆத்மாவுக்குள் பயம் வர அனுமதிக்கும்போது, உங்கள் ஆத்துமா புத்துணர்வடைய முடியாது. ஒவ்வொரு கணமும் பேதுருவின் ஆத்துமா
புத்துணர்ச்சி பெறவில்லை. பேதுரு இயேசுவைப் பார்த்தபடியால் அற்புதவிதத்தில் நடக்க முடிந்தது. அவன் கண்கள் காற்றையும் அலைகளையும் கண்டதும் பயத்தை உள்ளே அனுமதித்தான். இதனால் அற்புதம் தடைபட்டு நின்றுவிட்டது! கர்த்தராகிய இயேசுவே இந்த அற்புதத்தில் அவனை நடத்திய போதும் பெருங்காற்றையும் அலைகளையும் காண அவரது மனம் திசைதிருப்பப்பட்ட அந்தத் தருணத்திலேயே பயத்தினால் அவரது ஆத்துமா நிரப்பப்பட்டு மூழ்கிப்போனார். இதுவே எல்லாவற்றுக்குமான பதில்! இயேசு அதை நேரடியாக சுட்டிக்காட்டுகிறார். அவனுடைய பயமே காரணம்! பயம் தேவனிடத்தில் இருந்து வருவது அல்ல, அது பிசாசினிடத்திலிருந்து வருகிறது.

## உங்கள் பயமே உங்கள் அற்புதங்களைத் தடுக்கும்!

நீங்கள் நினைக்கலாம் தண்ணீரில் நான் நடக்க விரும்பவில்லை எனவே எனக்கு அதைப்பற்றிய பயமும் இல்லை என்று. நான் தண்ணீர் அல்லது உயரங்களை குறித்த பயத்தைப் பற்றி பேசவில்லை, ஆனால் உங்கள் மனங்களில் மருளும் பயத்தைப் பற்றி சொல்கிறேன். பொதுவாகவே கணினி இயங்குதளம் (operating system) மேம்படுத்தப்பட்ட மென்பொருளால் (software updates) திரும்ப நிறுவப்பட வேண்டும் (reintall) அல்லது புதுப்பிக்கப் படவேண்டும் (refreshed). வேத வார்த்தையால் உங்கள் மனதைப் புதுப்பித்து புத்துயிரூட்ட வேண்டும். வேத வசனங்கள் உங்கள் இருதயமாகிய பலகைக்குள் இருக்கும் வரை உங்கள் மனம் விசுவாசத்தால் புத்துணர்ச்சி பெரும். நம் வாழ்நாளின் ஒவ்வொரு கணப் பொழுதும் நம்முடைய விசுவாசம் புதுப்பிக்கப் பட்டுக் கொண்டே இருந்தால் மற்ற விஷயங்கள் உள்ளே நுழைய முடியாது. ஆகவே தான் "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கம் இல்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருங்கள் " என்று திருமறை கூறுகிறது.

தேவனுடைய வார்த்தை என் கால்களுக்கு தீபம் என்று தாவீது கூறுகிறார். அது தேனிலும் மதுரமானது. இதன் பொருள் என்னவெனில் நீங்கள் அதை அசை போட்டு, அதில் வசித்து, அதில் வாழ வேண்டும். புயல் காற்றிலே வாழ்க்கைப் படகு அலைக்கழிக்கப் பட்டாலும் மாம்ச சிந்தையை விட்டு ஆவியின் சிந்தையில் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் கடவுளுடைய வார்த்தையில் கவனம் செலுத்தும் வரைக்கும் உங்கள் மனம் மீண்டும் மீண்டும் புதுபிக்கப் படுகிறது. “நடந்து வா” என்ற வார்த்தையில் நீங்கள் கவனம் செலுத்தும் வரை நீங்கள் அற்புதத்தில் நடந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கவனத்தை இழந்து இங்கேயும் அங்கேயும் திசை திருப்பி பார்க்கும்போதோ பயத்தை ஊடுருவ அனுமதிப்பீர்கள். பயம் உள்வந்தவுடன் விசுவாசம் தானாகவே விலகிவிடுகிறது.

தேவன் சுயபரிதாபத்திற்க்கு பதிலளிப்பதில்லை. பயத்திற்கும், அழுகைக்கும் செவிமடுக்காமல் விசுவாசத்திற்கே விடை அளிக்கிறார். பலவீனத்திற்கு அல்ல தேவன் பலத்திற்கே பதிலளிக்கிறார்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***தேவன் விசுவாசத்திற்கும், உள்ளத்தின் உறுதிக்கும் பதிலளிக்கிறார்.***

நான் தேவன் என்று சொல்லும்போது, மாம்சத்தில் வந்த இயேசுவைப் பற்றி பேசவில்லை மாறாக ஆவிக்குரிய உலகில் வீற்றிருக்கும் இயேசுவைப் பற்றி பேசுகிறேன். மாம்சத்தில் அவதரித்து வந்த இயேசுவைப் போல நம் தேவன் இருப்பதில்லை. மாம்சத்தில் வந்த இயேசுவுக்கு ஆத்துமாவும், உணர்ச்சியும் இருந்தன. அன்று இயேசு கண்ணீர் விட்டு அழுதார். ஆனால் இன்று நீங்கள் அவர் அழுவார் என்று எதிர்பார்க்க முடியாது. உங்களையும் என்னையும் போல அன்றைக்கு இயேசுவிற்கு மாம்சமும், இரத்தமும், ஆத்துமாவும் இருந்தது. பரிதாபம், வலி மற்றும் துன்பங்களுக்கு இயேசு எதிர் வினையாற்றி அழுதார். நீங்கள் அவரை மென்மையாகவும் சாதுவாயும் செயலாற்றுவதை

கண்டீர்கள். அப்படிதான் அவரை காட்டிக்கொண்டார். மாட்டு தொழுவத்தில் பிறந்து தச்சனுடைய வீட்டில் ஏழ்மையில் வளர்ந்து எளிய வாழ்வு வாழ்ந்தார். மக்களால் கடிந்துகொள்ளப்பட்டு பரிகசிக்கப் பட்டாலும் அவர் அமைதியாக இருந்து அவர்களை மன்னித்து எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார். மக்களின் வேதனைகளுக்கும் கண்ணீருக்கும் செவிமடுத்து பதிலளித்தார். இயேசுவை இப்படித்தான் நாம் அறிவோம்
திருமறையில் நாம் பார்த்த இயேசுவைப் போல இப்பொழுது தேவனைக் காண முடியாது. அழுது உணர்ச்சிகளைக் கொட்டி தேவனை நம் வழிக்குக் கொண்டுவர முடியாது. நீங்கள் குழந்தையாக இருந்தபோது பெற்றோரிடம் அழுது அடம் பிடித்து காரியத்தை சாதித்திருக்கலாம். பின் நாட்களில் உங்கள் வாழ்க்கைத் துணையுடனுமே கூட இதே தந்திரத்தை கையாண்டு இலட்சியத்தை அடைந்திருக்கலாம். இப்படியே தேவனிடமும் நடத்த முயற்சித்தால் நம் பருப்பு அங்கு வேகாது. இந்த அணுகுமுறை தேவனிடம் செயல்படாது.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***
***<u>உணர்ச்சிவசப் படுத்துகின்ற காரியங்கள் தேவனிடம் எடுபடாது.</u>***

நீலிக்கண்ணீர் விட்டு உணர்ச்சி வசப்படுத்தி காரியங்களை சாதிக்கும் அணுகு முறைகள் தேவனிடம் எடுபடாது. இவ்வாறு இல்லாது இருந்தால் இந்நேரம் அழுது புலம்பி பிரார்த்தனை செய்கிறவர்கள் பெரிதாக சாதித்து வெற்றி பெற்றிருப்பார்கள். உங்கள் அறை கதவைப் பூட்டி அழுது ஜெபித்து இப்போது என்ன செய்ய வேண்டும் என்று தேவனிடம் கேட்பீர்களானால் **சத்தியத்தை அறியுங்கள் சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்** என்கிற பதிலை தருவார்.

**"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்" (ஓசியா 4:6)** என்று தேவன் குமுறுகிறார்.

அழுது புலம்பி உணர்ச்சிவசப்படுத்தி காரியம் சாதிக்க நினைக்கும் தவறான அணுகுமுறைகளிலிருந்து சபையானது விடுபட வேண்டும். தேவன் ஆவியாய் இருக்கிறார். ஆவிக்குரிய இராஜ்ஜியத்தில் ஆவியில் இடை படுவதற்கென்று சில விதிமுறைகள் உண்டு. சத்திய ஆவியானவர் சகல சத்தியத்திலும் உங்களை நடத்தி வழி காட்டுவார். மடியில் விழுந்து புலம்பி அழ அவர் இல்லை. அழுகைக்கும், பலவீனத்திற்கும், சுயபட்சபாதத்திற்கும் தேவன் பதிலளிப்பதில்லை. கடவுள் என்றால் ஆவி என்று பொருள். தேவன் ஆவியாய் இருக்கிறார். அந்த ஆவியானவருடன் நீங்கள் இணைந்து தொடர்பு கொள்ள வேண்டுமானால் அதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. முதலில் அவற்றைப் புரிந்துகொண்டு, பின்பு அதில் ஈடுபட்டால் அவரைக் கண்டு கொள்ளலாம்.

அறியாமை ஒரு பேரின்பம், அது உங்களைக் கொல்லும். செல்லக் கூடாத ஒருவழிச் சாலையில் சென்று, "எனக்கு இது தெரியாது" என்று நீங்கள் சொல்லிவிட முடியாது. விபத்தில் சிக்கி ரத்த வெள்ளத்தில் மரித்துவிடுவீர்கள். இனியொரு வாழ்வு வாழ்வதற்கு கிட்டாது. எனவே அறியாமை என்பது

பேரின்பம் அல்ல. இந்த விஷயங்களை யாரும் உங்களுக்கு கற்பிக்கவில்லை என்று நீங்கள் குறை கூற முடியாது. கிறிஸ்தவ திருச்சபை எப்போதும் சுய பட்சாபாத மனப்பான்மையுடன் வாழ்கிறது. உலகம் முழுவதும் நாம் தாக்கப்பட்டு கொல்லப்படுகிறோம். அதிகாரத்தை நீங்கள் கையில் எடுங்கள்.

அதிகாரத்தை பேசவும், அதிகாரத்தில் நடக்கவும் பரிசுத்த வேதம் நம்மை அழைக்கிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் பலவந்தம் பண்ணி அதைப எடுத்துக் கொள்ளுகிறார்கள் (மத்தேயு 11:12). "எல்லாமே எனக்கு தெரியாது ஆண்டவரே, ஆனாலும் ஏதாவது செய்யுமே" என்று நீங்கள் சொல்ல முடியாது. சத்தியத்தையும், அறிவையும் தேடுங்கள் என்று ஆண்டவர் அழைக்கிறார். திருமறை வலியுறுத்துகிற ஞானமும், அறிவும் தான் என்ன? மிதமிஞ்சிய விஞ்ஞானமோ? ஏவுகண அறிவியலோ?

எந்த ஞானத்தைப் பற்றி வேதம் இங்கே பேசுகிறது? அது ஆவிக்குரிய உலகத்தைக் குறித்த ஞானத்தைப் பற்றி பேசுகிறது. வெள்ளியைப் போல் நாடி, புதையலைப் போல் தேடி ஞானத்தை சம்பாதி என்று சாலொமோனின் நீதிமொழிகள் சொல்கிறது.

| **நீதிமொழிகள்** | |
|---|---|
| **2:4** | **அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில்** |
| **03:13** | **ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்.** |
| **04:05** | **ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.** |
| **04:07** | **ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்.** |
| **15:14** | **புத்திமானுடைய மனம் அறிவைத் தேடும்; மூடரின் வாயோ மதியீனத்தை மேயும்.** |
| **16:16** | **பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை!** |
| **18:15** | **புத்திமானுடைய மனம் அறிவைச் சம்பாதிக்கும்; ஞானியின் செவி அறிவை நாடும்.** |

தேவன் ஏன் அறிவைப் பற்றி இங்கு பேச வேண்டும்? சர்வ வல்லவராய் இருந்தும் ஏன் நேரடியாக அவர் தலையிட்டு அவர்களைக் காப்பாற்றுகிறது இல்லை? “என் ஜனங்கள் அறியாமையால் சங்காரமாகிறார்கள்” என்று தேவன் இதற்கு பதில் கூறுகிறார். இது இயேசுவின் கூற்றைப் போலா தெரிகிறது? நாம் அறிந்த தேவனின் சொற்களா இவை?

கடந்த 20 வருடங்களாக நான் இந்த ஊழியத்தில் இருக்கிறேன். உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு துயரம் சம்பவிக்கும்போது அது ஏன் என்னை காயப்படுத்துகிறது? “அவர்களின் வாழ்க்கையில் இது ஏன் சம்பவித்தது?" என்று பலமுறை நான் ஜெபத்தில் தேவனை நோக்கி கேட்கிறேன். என் உடல் நலத்தையும், என் தனிப்பட்ட நேரத்தையும், என் குடும்ப வாழ்க்கையையும்

வருத்திக்கொண்டு இறைவனிடம் இடைவிடாமல் மன்றாடி மணிக்கணக்கில் காத்திருக்கும் போது, அவர் கிருபையாய் சில விஷயங்களைக் கற்றுக் கொடுத்தார்.

நீங்கள் சத்தியத்தை அறிந்தால், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்! ஆவிக்குரிய உலகம் அப்படித்தான் செயல்படுகிறது. அறிவைத் தேடுங்கள். ஞானத்தைத் தேடுங்கள். அதிகாரத்தைக் கையில் எடுங்கள்.
ஜனக்கூட்டத்தில் ஒருவருடைய மகன் ஊமையும் செவிடுமான ஆவி பிடித்து அலைக்கழிக்கப்பட்டான். அநேக அற்புதங்களை செய்த சீஷரிடத்தில் கேட்டும் அவர்களால் ஒன்றும் செய்யக் கூடாமற்போயிற்று. ஆகவே, அந்த மனிதன் தன் மகனை இயேசுவிடம் அழைத்து வந்தான். இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்?" என்றார். தன்னுடைய காலங்கள் குறுகியிருப்பதால் அவர்கள் அதைப் புரிந்துகொண்டு ஆவிக்குரிய ரீதியில் அணுக அறிவுறுத்தினார்.

காற்று இயக்கவியல் (aero dynamics), தானியங்கியல் (robotics), தகவல் தொழில்நுட்பவியல் (IT) போன்ற இன்ன பிற உலக ரீதியான படிப்புகளை பற்பல ஆண்டுகள் பயில்கின்ற நாம், ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்ததான காரியங்களில் அக்கறையுடன் செயல்படவில்லை.

லூக்கா 12:13-21-இல் நாம் பார்க்கிறபடி, ஜனக்கூட்டத்தில் ஒருவன் இயேசுவை நோக்கி ஆஸ்தியைப் பாகம்பிரித்து தன் பங்கைத் தனக்குத் தரும்படி அவன் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். இயேசுவோ பொருளாசையைக்குறித்து எச்சரித்து, அவனது கோரிக்கையை நிராகரித்தார். உலகத்தின் திரளான ஆஸ்தியை விட பரலோகத்தின் பொக்கிஷங்கள் அதிமுக்கியமானது என்பதை தன் சீஷருக்கு கற்பிக்க அச்சந்தர்ப்பத்தை இயேசு பயன்படுத்தினார். இதனை மேலும் புரியவைக்க ஐசுவரியாவான் ஒருவன் தனக்கு விளைந்த மிகப்பெரிய தானியத்தையும் பொருள்களையும் சேர்த்துவைக்கக் கட்டின களஞ்சியங்களைக் குறித்த உவமையை பயன்படுத்தினார்.

விருப்பத்திற்கும் தேவைக்கும் மேலான மிதமிஞ்சிய செல்வம் இருந்ததால் அவர் கவலையில்லாத வாழ்வு வாழ எண்ணினார். இதற்கு தேவனின் பதில் என்னவென்றால், அந்த இராத்திரியிலே அவன் எடுத்துக்கொள்ளப் பட்டால் அவன் சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். ஒரு மனிதன் தனக்கு அளவற்ற செல்வங்களை வைத்திருந்தாலும் தேவனுடைய பார்வையில் அவன் ஐசுவரியவான் அல்ல.

ஆத்துமாவைக் குறித்த கரிசனம் உங்களுக்கு இல்லை என்று திருமறை சொல்கிறது. பணத்தைப் பற்றி மிகவும் கவலைப்படும் நீங்கள் ஒருவேளை இன்று நீங்கள் மரித்தால் நீங்கள் எங்கு செல்வீர்கள்? என்ற அறிவு உண்டா. உலக ஞானத்தைப் பெற நீங்கள் உங்கள் நேரத்தையும் பணத்தையும் சக்தியையும் செலவிட்டு நிறையப் பெற்றுள்ளீர்கள். அது உங்களுக்கு நல்லது தான். ஆனால் இன்றிரவு நீங்கள் மரித்தால், உங்கள் ஆன்மாவுக்கு என்ன நடக்கும் என்பது பற்றிய அறிவு உங்களுக்கு இருக்கிறதா? அதைப்

பற்றி அறிந்து கொள்ள நீங்கள் உங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறீர்களா?

"உலகம் எங்ஙனம் சுழன்று கொண்டிருக்கிறது, நான் எவ்வளவு வேகத்தில் சென்றால் அதற்கு ஈடு கொடுக்கலாம். எனவே தற்பொழுது இதைப் பற்றி சிந்திக்க அவசியமில்லை. பிற்பாடு பார்த்துக்
கொள்ளலாம்" எனலாம். நான் புறஜாதிகளைப் பற்றி பேசவில்லை மாறாக திருச்சபை மக்களைப் பற்றி பேசுகிறேன். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று இயேசு கேட்கிறார். நாம் இந்த வசனத்தை சுவிசேஷத்திற்காக மாத்திரம் எடுத்துக்கொள்கிறோம். நீங்கள் இயேசுவை ஏற்கவில்லை என்றால், உங்கள் ஆத்துமாவை பறிகொடுக்கிறீர்கள். ஆனால் இயேசு அந்த வார்த்தைகளில் அங்கு பேசவில்லை. நீங்கள் என்னைப் பின்தொடர வில்லையென்றால் என்று அவர் சொல்லாமல் மாறாக நீங்கள் ஞானத்தைத் தேடாமலும் உங்கள் ஆத்மாவைப் பற்றி நீங்கள் சிந்திக்காமலும் இருந்தால் உங்கள் ஆத்துமாவின் நிலை என்ன என்று வினவுகிறார்.

தேவன் இங்கே பயம் மற்றும் விசுவாசத்தைப் பற்றி நமக்குக் கற்பிக்க முயற்சிக்கிறார். இயேசு விசுவாசத்தையும் பயத்தையும் பற்றி அடிக்கடி விரிவுரைத்தார். பயம் இருந்தால் அங்கே ஒளியின் பற்றாக்குறை இருக்கிறது என்று அர்த்தம் எனவே நாம் அகவிளக்கேற்ற வேண்டும்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***அக விளக்கை ஏற்ற வேண்டும்***

எவ்வாறு விளக்கேற்றி ஒளியை வரவழைப்பது? திரியில் நெருப்பு மூட்ட வேண்டும். "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று வேதம் சொல்கிறது. பரிசுத்த ஆவியில் ஜெபிப்பதன் மூலம் விசுவாசம் வளர்கிறது. வேதத்தைத் திரும்ப திரும்ப வாசியுங்கள். எல்லா நேரங்களிலும் அந்நிய பாஷையில் ஜெபியுங்கள். உங்கள் மனதை புதுப்பித்துக் கொண்டே இருங்கள். உங்கள் உதடுகளால் தொடர்ந்து தேவனுக்கு துதி பலி செலுத்துவது மிகவும் முக்கியம்.

இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுலையும் இஸ்ரவேலரையும் பற்றி சற்றே தியானிப்போம்.

இஸ்ரவேல் மக்களுக்கு என்று ஒரு இராணுவம் கட்டமைக்கப் படவில்லை.. அவர்களுக்கு போர் கலை தெரியாது, அதற்கான ஆயுதங்களும் இல்லை. பெலிஸ்தர்களுக்கு போரும் புதிதல்ல, போர்க்களமும் புதிதல்ல. எனவே அவர்கள் 3000 ரதங்களுடன் சண்டையிட கூடினர். ஒவ்வொரு ரதத்திலும் 2 தேரோட்டிகளும் பலதரப்பட்ட யுத்த வீரர்களும் பெருந்திரளாய் இருந்தனர். அவர்கள் மேலே சென்று இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக முகாமிட்டார்கள். அபிஷேகம் செய்யப்பட்ட ராஜாவாக, போரின் ஒழுங்கு தெரியாதவனாய், போர் கலை பற்றி அறியாதவனாய், ஒரு நாடோடி பழங்குடியினரைப் போல்

இருந்தான் சவுல். I சாமுவேல் 13:5 -இல் இச்சம்பவத்தை வாசிக்கலாம். பெலிஸ்தர்கள் போரில் மிகவும் மேம்பட்டவர்கள். அவர்களுக்கு ஏராளமான மனிதர்கள் இருந்தார்கள். ராஜாவும் அவரது மகனும் தலா ஒரு வாள் வைத்திருந்தார்கள். சவுலும் யோனத்தானும் விசுவாசத்தோடு செயல் பட்டார்கள். பயமும் விசுவாசமும் ஆவிக்குரியது.

சவுல் ராஜாவின் மகனாகிய யோனத்தானோ தன் தந்தையை விட தேவனை நம்பினான்.

**ஒருநாள் சவுலின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: நமக்கு எதிராக அந்தப் பக்கத்தில் இருக்கிற பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போவோம் வா என்று சொன்னான்; அதை அவன் தன் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை (1 சாமுவேல் 14: 1).**

யோனாத்தான் தன் தந்தையிடம் சொல்லவில்லை, ஏனென்றால் அவர் அனுபவமும் பயமும் கொண்ட மனிதர். பயம் வரப்போகிறது என்று உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் தந்தையின், தாயின் மனைவியின் அழைப்பைக் கூட நிராகரிக்க வேண்டும். அவர்கள் எரிச்சலோடும் பயம் சார்ந்த மனக் கிளர்ச்சியோடும் உங்களை அழைக்கக் கூடும். அத்தகைய உணர்ச்சிகளுடன் அவர்கள் உங்களிடம் பேசினால் அது உங்களையும் பற்றிப்பிடித்து பாரமாக்கும். ஒரு மணிநேரம் ஜெபத்தில் உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள். பின்னர் திரும்ப அழைத்து அவர்களிடம் நீங்கள் பேசும்போது அவர்களின் பாரம் உங்களிப் பற்றி பிடிக்காது. யோனாத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனிடம் பேசினான் என்று பார்க்கிறோம். ஏன் ஒரு வாலிபன் என்று திரும்பத் திரும்ப? அது ஏன் ஒரு அனுபவமிக்க ஆயுததாரியாய் இருக்கக் கூடாது? அனுபவம் முதிர்ச்சியைக் கொண்டு வருமே. ஏனென்றால் இளம் கன்று பயம் அறியாது. அவர்கள் எதையும் செய்ய முயற்சிப்பார்கள். பல தோற்கடிக்கப்பட்ட தோல்வியின் அனுபவங்களினால் முதிர்ச்சி வருகிறது. நமக்கு பயம் தேவையும் இல்லை அதை அறிய வேண்டியதும் இல்லை.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***
***நான் பயப்பட தேவையில்லை***

மனதை இளமையாகவும் முதிர்ச்சியற்றதாகவும் வைத்திருங்கள். முதிர்ச்சி என்பது தோல்வியின் அனுபவங்களால் ஏற்பட்ட தொகுப்பாகும். அது தோற்கடிக்கப்பட்ட பயத்தின் அடிப்படையில் இயங்குகிறது. எனவே தான் வாலிபன் என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல் இங்கே சுவாரஸ்யமாகிறது.

| I சாமுவேல் 14:1 |
|---|
| **ஒருநாள் சவுலின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: நமக்கு எதிராக அந்தப் பக்கத்தில் இருக்கிற பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போவோம் வா என்று சொன்னான்; அதை அவன் தன் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.** |

இது யோனாத்தானின் மனதில் உள்ள வலிமையை விவரிக்கிறது. யோனாத்தானுக்கு எந்த பயமும் இல்லை. இது விவேகமானதா? பெரும் படை திரளுக்கு எதிராக வெறும் வாளையும், வேறொரு வாளைக் கொண்ட ஒரு வாலிபனுடனும் செல்வது தர்க்கரீதியாக சரியானது தானா?

எண்ணிக்கை அல்ல; தரமே முக்கியம்.

| **I சாமுவேல் 14** | |
|---|---|
| **8** | **அதற்கு யோனத்தான்: இதோ, நாம் கடந்து, அந்த மனுஷரிடத்திற்குப் போகிறவர்கள்போல அவர்களுக்கு நம்மைக் காண்பிப்போம்.** |
| **9** | **நாங்கள் உங்களிடத்துக்கு வருமட்டும் நில்லுங்கள் என்று நம்மோடே சொல்வார்களானால், நாம் அவர்களிடத்துக்கு ஏறிப்போகாமல், நம்முடைய நிலையிலே நிற்போம்.** |
| **10** | **எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள் என்று சொல்வார்களானால், ஏறிப்போவோம்; கர்த்தர் அவர்களை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; இது நமக்கு அடையாளம் என்றான்.** |

இங்கு போர் உத்தி தான் என்ன? இப்போது ஒளிந்து கொண்டிருக்கிற நாம் அங்கு சென்று நம்மை அவர்களிடம் காண்பிப்போம். அவர்கள் நம்மைப் பார்க்கட்டும்

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***சபை மறைந்திருந்தது போதும். அவர்கள் நம்மைப் பார்க்கட்டும்.***

ஒளிந்து கொள்வது என்பது பயத்தின் மனப்பான்மை ஆகும். பெலிஸ்தர்கள் யோனாத்தானையும், ஆயுததாரியையும் கண்டு 'காத்திருங்கள்! நாங்கள் அங்கே வருகிறோம்' என்று சொல்லியிருந்தால், அவர்கள் அங்கே காத்திருந்து இருப்பார்கள். ஒருவேளை பெலிஸ்தர்கள் 'நீங்கள் மேலேறி எங்களிடத்தில் வாருங்கள்' என்று சொல்லி இருந்தாலும், அவர்கள் மேலேறி சென்றிருப்பார்கள். ஏனெனில் பெலிஸ்தரை தேவன் அவர்கள் கரங்களில் ஏற்கனவே ஒப்புக்கொடுத்தார் என்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

எந்த இரு வழியாயினும் அவர்கள் அனைவரையும் கொல்ல ஒரு வாள் போதும் என்று யோனாத்தானுக்கு நன்கு தெரியும். அவர்கள் வாருங்கள் என்று சொல்லி இருந்தால் இவர்கள் மேலேறி அங்கு சென்று அவர்களைக் கொன்றிருப்பார்கள். ஒருவேளை காத்திருங்கள் என்று சொல்லியிருந்தால், அவர்கள் வந்து இங்கு மடியட்டும் என்று காத்திருந்திருப்பார்கள். யோனாத்தானிடம் ஒரே ஒரு வாள் மட்டுமே இருந்தாலும் அவனிடம் பெருத்த விசுவாசம் இருந்தது.

**பயம் என்பது விசுவாசம் இல்லாதது**. இருள் என்பது ஒளி இல்லாதிருப்பது. நாம் பலிபீடத்தைக் கட்டி ஸ்தோத்திர பலியிடுகிறோம். தேவன் சுயபரிதாபத்திற்க்கும், பலவீனத்திற்கும் பதிலளிப்பதில்லை. நீலிக்கண்ணீர் விட்டு உணர்ச்சி வசப்படுத்தி காரியங்களை சாதிக்கும் அணுகு முறைகளுக்கும் தேவன் பதிலளிப்பதில்லை. அவர் விசுவாசத்திற்கே பதிலளிப்பார். உங்கள் புலம்பலோ, அழுகையோ, சுய பரிதாபமோ அல்ல **உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**. ஒளிந்து கொள்வதை விட்டு வெளிவந்து சமூகத்திற்கு உங்கள் விசுவாசத்தையும் அதிகாரத்தையும் காட்டுங்கள்.

வனாந்திரத்தில் சத்தமிடுகிற யோவான் ஸ்நானனைப் போல சிறு கூட்ட ஜன திரளுக்கு முன் பேசினாலும் நாம் நிச்சயம் அடைய வேண்டிய இடத்திற்கு செல்வோம். நான் ஒரு பொருட்டாக இல்லா விட்டாலும் நம் வாழ்வில் தேவனுக்கென்று ஒரு திட்டம் உண்டு, நாம் அதை அடைந்தே தீருவோம். நம் விசுவாசத்தால் உலகத்தை மேற்கொள்வோம்.

**எபிரேயர் 11**-ஐ தியானியுங்கள்

**விசுவாசத்தால் நாம் புரிந்துகொள்கிறோம்**

| எபிரெயர் 11 | |
|---|---|
| 1 | விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. |
| 2 | அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள். |
| 3 | விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். |

**வரலாற்றின் விடியலான விசுவாசம்**

| எபிரெயர் 11 | |
|---|---|
| 4 | விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். |

| | |
|---|---|
| 5 | விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். |
| 6 | விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். |
| 7 | விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான். |

## ஆபிரகாமின் விசுவாசம்

| எபிரெயர் 11 | |
|---|---|
| 8 | விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். |
| 11 | விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள். |

## பரலோக நம்பிக்கை

| எபிரெயர் 11 | |
|---|---|
| 13 | இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் |
| 14 | இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். |
| 15 | தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. |

| | |
|---|---|
| 16 | அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே. |

### முற்பிதாக்களின் விசுவாசம்

| எபிரெயர் 11 | |
|---|---|
| 17 | மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். |
| 18 | ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே, இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, |
| 19 | தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். |
| 20 | விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான். |
| 21 | விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான். |
| 22 | விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான். |

### மோசேயின் விசுவாசம்

| எபிரெயர் 11 | |
|---|---|
| 23 | மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். |
| 24 | விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, |
| 25 | அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, |
| 26 | இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். |
| 27 | விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். |

| | |
|---|---|
| **28** | **விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்.** |
| **29** | **விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்தசமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக், கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத்துணிந்து அமிழ்ந்துபோனார்கள்.** |

## அவர்கள் விசுவாசத்தால் மேற்கொண்டார்கள்

| **எபிரெயர் 11** | |
|---|---|
| **30** | **விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது.** |
| **31** | **விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்.** |
| **32** | **பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.** |
| **33** | **விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்,** |
| **34** | **அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.** |
| **35** | **ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்;** |
| **36** | **வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்;** |
| **37** | **கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்;** |
| **38** | **உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.** |
| **39** | **இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.** |
| **40** | **அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.** |

மேலுள்ள அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்தும் இயேசுவினுடைய சீஷர்களின் வாழ்க்கையில் நிச்சயம் நிறைவேறும். இதையே நாம் எக்ளீஷியா, திருச்சபை என்று அழைக்கிறோம்.

# விசுவாசத்தில் நடந்து கொண்டே இருங்கள்

விசுவாசம் இரண்டு வகைப்படும்; ஒன்று 'வாழ்வாதாரத்திற்கான விசுவாசம்' மற்றொன்று 'அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் விசுவாசம்'. கிறிஸ்தவ குடும்பங்கள் பல விசுவாசத்தை தக்கவைக்கும் நோக்கத்தோடேயே கூட வாழ்கின்றன. நம்முடைய ஒரே குறிக்கோள் நன்கு படித்து, நல்ல மதிப்பெண்கள் எடுத்து, பட்டப் படிப்பு பெற்று, பாதுகாப்பான வேலைக்கு சென்று அதை தக்கவைப்பது. கிறிஸ்தவ சமூகம் பெரும்பாலும் வேலைக்கு செல்லும் பணியாளர் ரகம், பொதுவாக வணிகர்கள் ரகம் அல்ல. நாம் நம்மை சிறுபான்மை சமூகம் என்று நினைப்பதால் வணிகத்தில் அவ்வளவாக ஈடுபடுவதில்லை. என் வீடு, என் குடும்பம், என் பெற்றோர், என் குழந்தைகள் என்று ஒரு சிறிய வட்டத்தில் சுயத்திற்குள் வாழ்கிறோம். நாம் உலகத்திற்குள் செல்கிறோம். நம்மால் பொய் சொல்லவோ, திருடவோ, கொல்லவோ, இன்னபிற கெட்ட காரியங்களைச் செய்யவோ முடியாது. நாம் சீக்கிரம் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் ஆனபடியால் நம் வட்டத்திற்கு உள்ளேயே சுயத்திற்குள் வாழ்கிறோம். தேவன் நமக்கு அருளவேண்டிய தெல்லாம் நாம் அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கான விசுவாசம் மட்டுமே. விசுவாசம் தனக்கானதற்காக சுயத்திற்கு தக்கவைக்கப்பட்டது போதும். அது விருத்தி அடைந்து முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். தேவனை விசுவாசிக்காதவரைக்கும், இன்று நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு உங்களை அழைத்துச் செல்ல முடியாது. விருப்பத்தோடு விசுவாசத்தை நீங்கள் செயல்படுத்தும்போது நீடித்திருக்கும் விசுவாசத்தை பெறுவீர்கள். வாழ்க்கையில் சமநிலையில் இருக்க விரும்புகிறேன் என்று வீணடித்துவிடாமல் விசுவாசத்தில் மேலெழுங்கள். உங்கள் நிறுவனத்தில் உங்களக்கு கிடைக்கும் 20 சதவீதம், 30 சதவீதம் சம்பள உயர்வு போன்றது அல்ல இது. அதை விட மேலான விஷயங்களுக்கானது. பெரிய அதிகாரம், வல்லமையான கிரியைகள், பெரிதினும் பெரிதான காரியங்கள். இந்த பெரிய விஷயங்களை நாம் விரும்பத் தொடங்க வேண்டும். தேவன் எனக்குக் கொடுத்த பணியில், தொழிலில் பெரிதும் மகத்துவமுமான காரியங்களுக்காக வாஞ்சியுங்கள். உங்கள் உத்யோகத்தில், உங்களுக்கு ஆர்வமுள்ள துறையில் பெரிதினும் பெரிதானவற்றைக் காண தேவனிடம் கேளுங்கள். என் எல்லை பெரிதாகும், நான் மேலெழும்புவேன். சாதாரண 10,000 ரூபாய் சம்பள உயர்வுகளில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டாம். உங்கள் படகிலிருந்து குதித்து தண்ணீரில் நடக்கச் செய்யும் விசுவாசத்தைக் கேளுங்கள். காற்றையும் அலைகளையும் கம்பீரமாய் நின்று பார்க்க உங்களுக்கு விசுவாசம் வேண்டும். அமரிக்கையோடிருங்கள். இன்னைக்கு கொஞ்சம், நாளைக்கு இன்னும் கொஞ்சம் என்ற அணுகுமுறையை அவர் கையாளவில்லை. மெதுமெதுவான நாளுக்கு நாள் முன்னேற்றம் என்பது சாதாரணமானது. விசுவாசப் பாய்ச்சலும் விசுவாசத் தாவலும் நமக்கு தேவை. மழை இல்லாவிடினும் ஈசாக்கு விதை விதைதான். நோவா பேழையைக் கட்டும் வரைக்கும் மழையைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை.

உங்களுக்குத் தெரியுமா, நோவாவின் காலத்திற்கு முன்புவரை உலகில் மழை பெய்யவே இல்லை. இருந்தாலும் அவர் ஒரு பேழையை கட்டினார். இது முற்றிலும் வேறுபட்ட அனுபவம். நாம் அதை விசுவாசக் கண்களால் பார்க்க வேண்டும், ஏனென்றால் ஆவிக்குரிய உலகில் விதி அவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. விசுவாசத்தால் நாம் அதை நம்பி பெரும் வரை நாம் செயல்படத் தொடங்கமாட்டோம். தேவன் நமக்கென்று ஆயத்தம்பண்ணினவைகளை நாம் காண வேண்டும். தாலந்துகள், ஆற்றல்கள் மற்றும் திறமைகளை அறிய வேண்டும். தேவன் உங்களுக்குள் வைத்திருக்கும் திறனை அறியுங்கள்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***
***<u>நான் கற்பனை செய்ய ஆரம்பிப்பேன்.</u>***

குறைந்தபட்சம் பகல் கண்வய காண ஆரம்பிக்கலாம். 'போதகரே 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வைராக்கியம் இருந்திருந்தால் நான் சாதித்திருக்கலாம், இப்போது திருமணமாகி குடும்பம் இருக்கிறது நான் என்ன செய்வது?' என்று நீங்கள் சொல்லலாம். நான் சொல்கிறேன் கனவு மட்டும் காணுங்கள். நான் உங்களுக்கு வேறு எதுவும் சொல்லவில்லை. இப்போது நான் செய்துகொண்டிருப்பதை விட இன்னும் நான் செய்ய முனைகிறேன். இந்த எண்ணத்தை நீங்கள் உங்கள் சிந்தையில் இருத்தும்போது தூங்கும் போது உங்கள் கனவில் வழி பிறக்கலாம். அந்தக் கனவில் ஒரு பெரிய வெளிப்பாடு இருக்கலாம். இல்லாதவைகளிலிருந்து இருக்கிறவைகளை தொடங்கக் கூடும். இது போன்று அநேக சாட்சிகள் எங்களிடம் ஏராளம் உண்டு. எனவே கனவுலகில் குதியுங்கள்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***
***<u>அடுத்த நிலைக்கு செல்வேன்</u>***

நான் தோல்வி அடையக்கூடும் என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் வளர்ந்த விதமும் பயின்ற கல்வியும் உங்களை தோல்வியின் விளிம்பில் விடாது. கடை வீதியில் பொறுப்பற்றுத் திரியும் முரடர்களுக்கும், பொல்லாதவர்களுக்குமே அவ்வாறு வாய்க்கும். ஒரு நல்ல பையனாக வளரவும், ஒரே மனைவியை திருமணம் செய்து கொள்ளவும், அலுவலகத்திற்குச் சென்று வீட்டிற்கு பொறுப்பாய் வரவுமே சமுதாயம் நமக்குக் கற்பிக்கிறது. மேலாளர் உங்கள் தலையில் குட்டினாலும் தாழ்மையுடன் இரு. அமைதியாகவே இரு. எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு சிலுவையை சுமந்து செல். சபைக்கு தசமபாகம் கொடு. அப்பப்பா இந்த வாரம் நான் மரிக்கவில்லை, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என்கிறீர்களா? இது முற்றிலும் தோல்வி மனப்பாங்கு. நீங்கள்

என்ன சொல்ல வேண்டும்? இல்லையில்லை நான் தேவனுடைய பிள்ளை, ஆதலால் மாறுபட்டவன். குழந்தை என்று யாரோ சொல்கிறார்கள், நான் வித்தியாசமாக இருப்பேன். இந்த உலகிற்கு நீங்கள் ஒரு சாட்சியின் அடையாளம் என்று இயேசு சொல்கிறார். விசுவாச வாழ்வில் சாட்சியின் அடையாளம் என்பது ஒரு மைல்கல். இப்படி நடந்தால் 'மேலானவற்றை செய்யும் பயனுள்ள பயனுள்ள பாத்திரம் நான்' என்று நீங்கள் சொல்வீர்கள்.

**லூக்கா 5: 3-10**- ஐ தியானிப்போம்

| **லூக்கா 5** | |
|---|---|
| **3** | **அப்பொழுது அந்தப்படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப்படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.** |
| **4** | **அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.** |
| **5** | **அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.** |
| **6** | **அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்.** |
| **7** | **அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்.** |
| **8** | **சீமோன் பேதுரு அதைக்கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.** |
| **9** | **அவர்கள் திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம், அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானபடியால் அப்படிச் சொன்னான்.** |
| **10** | **சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.** |

பேதுரு இயேசுவை நோக்கி, “நீர் தச்சன்; நானோ கடலிலேயே பிறந்து வளர்ந்தவன். எந்த பருவத்தில் மீன் கிடைக்கும் என்று எனக்குத நன்கு தெரியும், நேற்று இரவு முழுவதும் நாங்கள் கடுமையாக பிரயாசப்பட்டோம்" என்று சொன்னான். இன்றும் இதைத்தான் எல்லோரும் சொல்கிறார்கள். 'நான் மிகவும் கடினமாக உழைக்கிறேன், இரவு முழுவதும் கடினமாக உழைத்தேன், எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் நீங்கள் வலையை வீசச் சொல்கிறீர்கள். எனவே நான் வலையை வீசுகிறேன்” . மீன்கள் வலையை நிறைத்தது. இப்போது நீங்கள் அதை சுமந்தாள் போதும். அதைப் பிடிக்க வேண்டியதில்லை.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***வலையை வீசுங்கள். அது நிரப்பப்படும்.***

வலைகள் கிழிக்கப்படுகின்றன; தரமான கணக்கற்ற மீன்களை நீங்கள் காண்கிறீர்கள். அமைப் பொழுதிலே மாற்றம். ஒரே வார்த்தை. அந்த வார்த்தை வந்ததால் அவர் வலையை வீசினார், அந்த வார்த்தை வந்தது அவர் தண்ணீரில் நடந்தார். பேசப்பட்டது 'ரீமா' வார்த்தை ஆதலால் அவன் வலைகளை திரும்ப வீசினான்.

நூற்றுக்கு அதிபதியின், கானானிய ஸ்திரீயின் காரியம் என்ன? நூற்றுக்கு அதிபதி இயேசுவிடம் வந்து, 'ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான்'. அதற்கு இயேசு: 'நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன்' என்றார். நூற்றுக்கு அதிபதியோ 'ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்' என்று அவரை வேண்டிக்கொண்டான். ஏனென்றால் பேசும்போது அது நடக்கும் என்ற அதிகாரம் அவனுக்குத் தெரியும். , 'அவர் பேசினால் அது நடக்கும்' என்று கூறி நூற்றுக்கு அதிபதி வேறு மட்டத்தில் செயல்படுகிறார். உங்களில் எத்தனை பேருக்கு இப்பேற்பட்ட விசுவாசம் உண்டு? விசுவாசத்தோடு நீங்கள் பேசினால் கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்வார் என்று. கானானிய ஸ்திரீ ஒருத்தி பிசாசினால் வேதனைப்படும் தன் மகளுக்காக இயேசுவைத் தொடர்ந்து வேண்டிக்கொண்டால். அவளுடைய ஜெபத்திற்கு இயேசு எந்த பதிலும் அளிக்கவில்லை. அவருடைய சீஷர்கள் வந்து 'இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும்' என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். இயேசுவோ 'காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல' என்றார். பிள்ளைகளுக்கு (இஸ்ரவேலர்) கொடுக்க வேண்டியதை நாய்க்குட்டிகளுக்குப் (இஸ்ரவேல் அல்லாதவர்) போடுகிறது நல்லதல்ல என்றார். ஆனாலும் கானானிய ஸ்திரீ விடாமல் குறைந்தபட்சம் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழுகிற உணவைத் திண்ணுமே என்றாள். இயேசு அவளுடைய விசுவாசத்தை மெச்சினார். நான் எதிர்பார்க்கும் அற்புதத்திற்கு

பெரிய உணவு தேவையில்லை சிறு துண்டே போதும் என்பதே அவள் எதிர்பார்ப்பு. கடுகளவு விசுவாசமே போதுமானது. பெரும்பாடுள்ள ஸ்த்ரீக்கோ வார்த்தையே வேண்டாம் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரமே போதுமானதாய் இருந்தது. நூற்றுக்கு அதிபதி இயேசுவின் வாயிலிருந்து அவர் உரைக்க வேண்டும் என்று விரும்பி வேண்டி பெற்றுக்கொண்டான். கானானிய ஸ்திரீயை பொறுத்த வரை இயேசு விரும்பி செய்கிறாரோ இல்லையோ மேஜையின் கீழ் விழும் அப்பதி துண்டுகளே போதுமானதாய் இருந்தது. பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஸ்திரீ ஆண்டவரிடம் பலவந்தமாய் தனக்கு வேண்டிய அற்புதத்தை எடுத்துக் கொண்டால். எது எப்படியாயினும் நீங்கள் எப்படி செயல்பட்டாலும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| ***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)*** |
|---|
| ***இப்பொழுது இருக்கும் நிலையில் நான் இருக்க மாட்டேன்*** |

பர்திமேயு என்கிற ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். பார்வையற்றவனாய் இருப்பதால் எழுந்து நடந்து கூட்டத்திற்குள் செல்ல முடியாது. அவனால் செய்ய முடிந்தது இயேசுவை நோக்கி கூச்சலிடுவதுதான். இங்கே நிலவும் பொதுவான சூழல் என்ன? இருக்கும் நிலையிலிருந்து மேலே எழும்பும் மாற்றத்திற்கான விருப்பம். இதுவே போதும் என்று இருந்து விடக் கூடாது. உங்கள் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உங்கள் முழு இருதயத்தோடு செய்யுங்கள்.

சகேயு குள்ளனானபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அதுவே தேவனின் ஆவியை அவரிடம் ஈர்த்தது. சகேயு என்ன விரும்பினான் என்று மிகத் தெளிவாக அறிந்தே தேவன் அவனிடம் கூறினார். மனம் திரும்ப வேண்டும் என்ற விருப்பம் இருந்ததால் ஏமாற்றியவர்களுக்கு பணத்தை திருப்பித் தருவேன் என்றான். தேவை என்னவென்றால் பயத்தில் செயல்படாமல் விசுவாசத்தில் செயல்பட வேண்டும்.

| **கலாத்தியர் 2:20** |
|---|
| **கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.** |

| ***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)*** |
|---|
| ***சரீரத்துக் கடுத்த காரியங்கள் இனி கணக்கில் வராது ஏனென்றால் இந்த உடலில் நான் இனி வாழவில்லை. கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்.*** |

நீங்கள் சரியான வாழ்க்கை வாழும் வரை உங்கள் சரீரம் என்ன செய்தாலும் கவலை இல்லை. நித்தியத்திற்குள் இந்த உடல் பிரவேசிக்கப் போவதில்லை. இந்த சரீரம் மரித்து, மண்ணுக்குள் செல்லும். ஆவியாகிய நானே இந்த சரீரத்துக்குள் வாழ்கிறேன். நீங்கள் ஒரு ஆவி; உங்கள் உடல் வழியாக உலகில் வந்துள்ளீர்கள். உங்களுக்குள் இருப்பது என்னவென்றால் தனித்துவ குணநலன்கள் கொண்ட ஆளுமை. நீங்கள் துடிப்பான, மகிழ்ச்சியான, ஆற்றல் வாய்ந்த, புன்னகைக்கும் ஆளுமை. உங்கள் சரீரம் தோல்விகளினால் துவண்டு பலவீனமாய் மாறிவிட்டீர்கள். எனக்குள் இருப்பது என்னில் வெளிப்பட வேண்டும். நாம் வாழ வேண்டிய வாழ்க்கையை இந்த உடலுடன் இணைந்து வாழ்கிறோம். நமக்கான வாழ்க்கையை நாம் வாழவில்லை. உங்கள் வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள், குறைந்தபட்சம் உங்கள் கனவிலாவது வாழத் தொடங்குங்கள். இது என் வாழ்க்கை, நான் எப்படி பறக்க வேண்டும், இதை எப்படி செய்ய விரும்புகிறேன்? நான் எப்படி கோடீஸ்வரராக விரும்புகிறேன்? எந்த வகையான காரை ஓட்ட விரும்புகிறேன்?. உங்கள் குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள். அவர்களிடம் ஆகச் சிறந்த திட்டங்கள் உள்ளன. பணத்தின் மதிப்பு தெரியவில்லை இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்று நீங்கள் உங்கள் குழந்தைகளை திட்டுகிறீர்கள். குழந்தைகளுக்கு பணத்தின் மதிப்பு தெரியாது. ஏனென்றால் அவர்கள் ஒரு சரீரமாக வாழாமல் அவர்கள் அவர்களாகவே வாழ்கிறார்கள். சில காலம் கடந்த பின்பு, நாம் சரீரமாய் வாழ கற்றுக்கொள்கிறோம். பணம் சம்பாதிக்கும் முயற்சியில் மிகவும் பிரயாசப்பட்டு, அடிபட்டு, நொந்து பக்குவப்படுகிறோம். இதின் நிமித்தன் நம் தனித்தன்மையான ஆளுமை மௌனித்து உடல் மட்டும் வாழ்கிறது. 'இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்று பவுல் சொல்கிறார். இப்போது வித்தியாசம் தெரிகிறதா? இதுவே ஆவியில் வாழ்வது ஆகும். கனவு காணத் துவங்குங்கள், கற்பனை செய்யத் துவங்குங்கள் அதுபோல உங்கள் கனவு உலகத்தை உருவாக்கத் தொடங்குங்கள்.

## சகோதரி மல்லிகா

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். என் பெயர் மல்லிகா. நான் ஒரு மென்பொருள் பொறியாளராக பணியாற்றி வருகிறேன். சிலைகள், சர்ப்பங்கள் மற்றும் மரித்த மூதாதையர்கள் ஆகிய இவைகளை தெய்வங்களாக வழிபடும் பாரம்பரியமிக்க இந்து குடும்பத்திலிருந்து வருகிறேன். எங்கள் நெருங்கிய உறவுப் பெண் ஒருவர் குறி சொல்லுகிற சர்ப்பத்தின் ஆவியை உடையவராயிருந்து சிறு வயதிலேயே மரித்துப்போயிருந்தார். என் பெற்றோர் அவரையும் வணங்கி வந்தனர். நான் அவர்களுக்கு மகளாகப் பிறந்தவுடன் மரித்த என் உறவுப்பெண்ணே மறுபடியும் பிறப்பெடுத்ததாக நினைத்து, என்னை அந்த ஆவிக்கு அர்ப்பணித்தனர். என் பருவ வயது முதல் உடலிலும், மனதிலும், ஆன்மீக வாழ்விலும் பல இன்னல்களை எதிர்கொண்டு வந்தேன். நன்றாக உறங்க முடியாது. கவனம் செலுத்தி பாடங்களைப் படிக்க முடியாது. இதனால் மன நிம்மதியை இழந்தேன். சரீரத்திலும் பல பாடுகள்; சமாதான மின்மையால் மனதளவிலும் நிலையற்ற சிந்தனை கொண்டிருந்தேன். என் அலுவலக காரியங்களிலும் ஒன்றுமில்லாத சாதாரண காரணங்களுக்காக தொடர்ந்து நிராகரிப்புகளுக்கு உள்ளானேன். எனக்குள்ளாகவே பல போராட்டங்களை சந்திப்பதால், என் வாழ்வின் அனைத்து பகுதிகளும் தடைகளால் இருளடைந்தன. இந்த சூன்யமான நிலையில் தான் "நித்திய ஒளி AG சபையில்" கலந்துகொள்ள ஆரம்பித்தேன். இந்த சபை ஆராதனைகளில் கலந்துகொள்ள ஆரம்பித்த அன்றிலிருந்து என் வாழ்வில் சிறிய மாற்றங்களை நான் உணர முடிந்தது.

ஒரு நாள் திடீரென்று என் மார்பகங்களிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. நான் கவலைப்பட்டு உடனே மருத்துவமனைக்குச் சென்றேன். மருத்துவர்கள் சில மருந்துகளைக் கொடுத்தனர், சில பரிசோதனைகள் செய்தார்கள், ஆனால் இரத்தப்போக்குக்கான காரணத்தை அவர்களால் கண்டறிய முடியவில்லை. இந்த நிலையில் போதகரிடம் என் வாழ்விலே நான் இதுவரை சந்தித்த, இப்பொழுதும் சந்தித்து கொண்டு வருகிற எல்லாவிதமான பிரச்சனைகளையும் பகிர்ந்து கொண்டேன். பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட போதகர், இந்த காரியங்களுக்காக எப்படி ஜெபிக்க வேண்டும், எப்பொழுதெல்லாம் ஜெபிக்க வேண்டும் என்று சில ஆலோசனைகளை கடைபிடிக்க கற்றுக்கொடுத்தார். போதகர் அறிவுறுத்திய ஆலோசனைகளை அப்படியே என் வாழ்வில் கீழ்ப்படிந்து கடைபிடித்தேன். இதன்மூலம் நாம் அனுபவித்த முதல் விடுதலை, நிம்மதியான தூக்கம். இரண்டாவதாக நான் பெற்றுக்கொண்ட விடுதலையாதெனில், என்னை ஆட்கொண்டிருந்த சர்ப்பத்தின் ஆவி முற்றிலும் என்னை விட்டு விலகினது. என் மார்பகத்தில் ஏற்பட்ட ரத்தப்போக்கு நின்று போனது. மேலும் நான்கு மாதங்கள் நான் வேலை இல்லாதிருந்தேன். ஆனாலும் போதகர் மிகச்சரியாக முன்னறிவித்த தீர்க்கதரிசனத்தின்படியே ஈஸ்டர் முடிந்த இரண்டு தினங்களிலேயே கர்த்தர் எனக்கு ஒரு நல்ல வேலையை அருளினார். போதகரின் வழிநடத்துதல் படி ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டேன். நான் பெற்றுக்கொண்ட மிகப்பெரிய அற்புதம் என்ன என்றால், ஞானஸ்நானம் பெற்ற

நாளிலிருந்து நான்கு மாதங்களாக என்னை வருத்திய இரத்தப்போக்கு (menstrual issue) அடியோடு நின்று போனது. கர்த்தர் எனக்கு சரீரத்திலும், ஆன்மாவிலும் முழு விடுதலையைக் கொடுத்தார். கொடிய அந்தகார இருளில் இருந்து ஆச்சரிய ஒளிக்கு என்னை வழி நடத்தி மீட்டுக் கொண்டார்.

தேவனுக்கே மகிமை! ஆமென்!!

We are now in Facebook, Instagram, Twitter, Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**

**https://www.instagram.com/elagchurch**

**https://www.twitter.com/ELAGchurch**

**https://www.facebook.com/ELAGChurch/**

We welcome your valuable feedbacks to **elagliterature@gmail.com.**

## போதகரை பற்றி

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமை போதகர்.



இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும், வல்லமையான, அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர். இவர் தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதி நேர ஊழியம் செய்து வந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேர ஊழியம் செய்து வருகிறார். தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும், வாழ்வாதாரத்தை உயிர்ப்பித்தும் உள்ளது. தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு, தெய்வீக சுகமும், விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சி பூர்வமான விடுதலை சரீரப் பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனிய கட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். இவருடைய ஊழியத்தின் நோக்கம் மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணரவும் வழிநடத்துகிறது.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும், தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ ராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

## சபையைப் பற்றி

ELAG சபை 4 பேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவ பிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.

## புத்தகத்தைப் பற்றி

இந்த புத்தகம் சபையின் இலக்கிய ஊழியக் குழுவால் உருவாக்கப்பட்டது. நமது சபையின் தலைமை போதகரால், ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை கொடுக்கப்படும் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரயோஜனத்திற்காக, வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகமானது உங்கள் வளர்ச்சிக்கும் ஆசிர்வாதத்திற்கும் ஏதுவாக அமையட்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.


**Eternal Light AG Church**
Opp. to St.Xavier's School,
2nd Cross,
Beddadasapura Road,
Electronic City Phase I,
Bengaluru-560100,
Karnataka, India


**Sunday Service:**
English Service: 09:00 AM - 11:00 AM
Tamil Service : 11:30 AM - 01:30 PM


Mob : 6364066791 / 6364066792
E-mail : ecitycf@gmail.com
Website : www.elagchurch.com